முச்சந்தி முரளி



"பாராளும் பரமனுக்காக நாடாளுமன்றில போராட்டம். நல்லாத்தான் இருக்கும் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 114

செவ்வாய்க்கிழமை
19 மார்ச் 2024

பங்குனி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## வடக்கில் கடந்தாண்டு மாத்திரம் ரூ. 18 கோடி காசோலை மோசடி

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு காசோலை மோசடி தொடர்பாக 79 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முறைப்பாடுகளின் அடிப்படையில் 34 பேர் 11

## ஜனாதிபதித் தேர்தலே முதலில்

கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு நேற்று 11

## போராட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 19

சுகாதாரத் தொழிற்சங்கங்கள் இன்று முன்னெடுக்கத் தீர்மானித்திருந்த பணிப்புறக்கணிப்பு ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 11

### வெடுக்குநாறிமலை விவகாரம்:

# நாடாளுமன்றத்துக்குள் இன்று தமிழ் எம்.பி.க்கள் போராட்டம்

## சந்திப்புக்கு நேரம் ஒதுக்க ரணில் பின்னடிப்பு

கொழும்பு, மார்ச் 19

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் தமிழ் மக்களின் வழிபாட்டுரிமையைத் தடுத்தது, 8 தமிழர்களைக் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 11

## வெடுக்குநாறி விவகாரம்; தொடரும் போராட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்துமாறு கோரியும் 11



## கிணற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு

வவுனியா, மார்ச் 19

வவுனியா, சமணங்குளத்தில் கிணற்றில் வீழ்ந்து இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தவரூபன் லக்சிகா (வயது-24) என்ற இளம் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

"நேற்றுமுன்தினம் மாலை அவர் 11

## யாழுக்கு ரணில் வெள்ளி வருகை

### பலாலியில் மாத்திரம் 3 நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். 11

### வெடுக்குநாறிமலைக்குத் தீர்க்கமான முடிவின்றேல்

# தமிழ்க்கட்சியினர் ஒருங்கிணைந்து நாடாளுமன்றைப் புறக்கணிப்பர்!

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் தீர்க்கமான முடிவுகள் இன்றேல் நாடாளுமன்றப் புறக்கணிப்பு என்ற தீர்க்கமான முடிவை எதிர்வரும் நாட்களில் தமிழ்க் கட்சிகள் ஒருமித்து எடுக்கும் என நம்புகின்றோம் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார். 11

## பேருந்தின் அவசரம்: பெண் உயிரிழப்பு

வவுனியா, மார்ச் 19

பூவரசங்குளத்தில் பேருந்தில் ஏறமுற்பட்டவரை அதே பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மணியர்குளத்தைச் சேர்ந்த சிவக்கொழுந்து வள்ளிப்பிள்ளை (வயது -76) என்ப 11

### செட்டிகுளத்தில்

## யானை தாக்கி ஒருவர் சாவு

வவுனியா, மார்ச் 19

செட்டிகுளம், மருதமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீதியால் பயணித்த ஒருவரை அந்தப் பகுதிக்கு 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்களே தம்மை நிர்வகிக்கும் இடைக்கால பொறிமுறை தேவை

## வலியுறுத்துகின்றது பிரித்தானியத் தமிழர் பேரவை

லண்டன், மார்ச் 19

**இலங்கை அரசாங்கமும் அதன் இராணுவ, பொலிஸ் நிர்வாகங்களும் தொடர்ச்சியாகத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டுவரும் கைதுகள், நில அபகரிப்பு மற்றும் பொது மக்களின் அன்றாட செயற்பாடுகளில் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள், இடையூறுகள் தொடர்பில் பிரித்தானியத் தமிழர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.**

வெடுக்குநாறிமலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட ஆலயப் பூசகரின் கைதும் பக்தர்களின் கைதும் கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ள பிரித்தானியத் தமிழர் பேரவை, அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறன கைதுகளும், தமிழர்களின் வழிபாட்டு உரிமைகளைத் தடுத்து, வழிபாட்டுத் தலங்களை அபகரிப்பதும், தொல்லியல் திணைக்களம் போன்ற வற்றை ஏவி விடுவதும், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தைச் சிதைத்து அவற்றை சிங்கள - பௌத்த அடையாளங்களால் உருமாற்றம் செய்து தமிழர் தாயகம் என்ற எம் உரிமை கோரிக்கையை சிதைப்பது இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் திட்டமிட்ட மூலோபாயம் என்றும் பிரித்தானியத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்கள் வாழமுடியாத சூழ்நிலைகளை உருவாக்கி அவர்களை மண்ணிலிருந்து வெளியேற்றுவது, தமிழர் அரசியல் பிரதிநிதித்துவத்தை சிதைப்பதும் செயலிழக்கச் செய்வதுமான செயற்பாடுகளை இடைநிறுத்தி தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றை உடனடியாக உருவாக்கவேண்டும் என்று இந்தியா உட்பட சர்வதேசத் தளப் பரப்பில் முக்கியமான உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை முன்வைக்கின்றோம் என்று பிரித்தானியத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பால் விற்பனையகம் கோப்பாயில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

கோப்பாய் வடக்கு பூதர் மடத்தடியில் 'பால் அமிர்தம்' என்னும் பால் விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரால் இந்தப் பால் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பால்பொருள்கள்மற்றும் கால்நடைகளுக்கான தீவனம் போன்றன இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

# மாடுகள் திருட்டு

பளை, மார்ச் 19

பட்டியில் கட்டப்பட்டிருந்த சுமார் 4 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 7 மாடுகள் ஒரே இரவில் இனந் தெரியாதோரால் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் பளையிலுள்ள இத்தாவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-9)



# காலாவதிப் பொருள்கள் உரிமையாளருக்கு ரூ.180,000 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியில் இயங்கிய பல்பொருள் அங்காடியில் காலாவதிப் பொருள்கள் மற்றும் தரமற்ற பொருள்கள் விற்கப்பட்டமைக்காக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையில் பொதுச்சுகாதாரப் பயிலுநர்கள் கோபிராஜ், லிங்கேஸ், சஜீவன், றொய்ஸ்ரன் ஆகியோர் இணைந்து திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் மேற்கொண்ட பரிசோதனையின்போது இரண்டு விற்பனை நிலையங்களில் காலாவதிப் பொருள்கள் மற்றும் தரமற்றதும் பாவனைக்கு உதவாததுமான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து குறித்த இரண்டு பல்பொருள் விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் எதிராக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நேற்றைய தினமே வழக்குகள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒரு பல்பொருள் அங்காடியின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அந்த அங்காடிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 18 குற்றச்சாட்டுகளுக்காக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. மற்றைய பல்பொருள் அங்காடியின் உரிமையாளர் நீதிமன்றுக்கு சமுகம் தரவில்லை. அந்த அங்காடிக்கு எதிரான வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (ம-26)



வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில், பங்குனித் திங்கள் உத்தர உற்சவம் நேற்று திங்கட்கிழமை சிறப்புற நடைபெற்றது. பக்தர்கள் ஆலயக் கேணியில் நீராடிவிட்டு, அம்மனுக்கு பொங்கலிட்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ப-20-9)

# மின்சாரப் பட்டியலுக்கான புதிய நடைமுறையால் வயோதிபர்கள் சிரமம்

முல்லைத்தீவு, மார்ச் 19

மின்சாரசபையால் தற்போது மின்கட்டணப் பட்டியல் கைத்தொலைபேசியூடாக அனுப்பட்டுவருவதால் வயோதிபக் குடும்பங்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், றெட்பானா, இளங்கோபுரம் ஆகிய இடங்களில் உள்ள குடும்பங்களில் அதிகளவான குடும்பங்கள் வயோதிப அங்கத்தவர்களை மட்டும் கொண்டுள்ளன. கைபேசி ஊடாக அனுப்பப்படும் மின்கட்டண விவரங்களை அறிந்துகொள்வதில் இவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-19)

# வட்டக்கச்சியில் காட்டு யானை!

## மக்கள் அச்சம்

வட்டக்கச்சி, கட்சன் வீதியில் உள்ள விவசாயப் பண்ணையை அண்மித்த பகுதிகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

காட்டுயானைகள் அந்தப் பகுதியில் உள்ள தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளன என்றும், பன்னங்கண்டிக்கும், வட்டக்கச்சிக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் வீதியோரமாக யானையின் நடமாட்டத்தை அவதானிக்க முடிகின்றது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது . சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)



# இல்ல அலங்கரிப்பில் இ.போ.ச. பஸ் விபத்து

வடமராட்சி, மார்ச் 19

யாழ்ப்பாணம் நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிலையில், அங்கு அமைக்கப்பட்டிருந்த இல்ல அலங்கரிப்பு ஒன்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அண்மையில் இ.போ.ச. பஸ் மோதி மாணவன் ஒருவன் உயிரிழந்த சம்பவத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த இல்ல அலங்கரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. (எ-100)

# செப்பனிடப்படுகின்றது மல்லாவி இணைப்பு வீதி

நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதிருந்த கரும்புள்ளியான் - பாலியாறு ஊடான மல்லாவி இணைப்பு வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க, கரும்புள்ளியான் கமக்கார் அமைப்பு மற்றும் வவுனிக்குளத் திட்டக்குழு ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் இந்த வீதி செப்பனிடப்படுகின்றது. (ப-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார மாற்றம் இலகுவானதல்ல!



## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 19**

**அதிகார மாற்றம் இலகுவானதாக இருக்கப்போவதில்லை. மாற்றங்கள் நிகழ்வதை உயர்குழாமைச் சேர்ந்த சிறுகுழ தடுக்கின்றது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

சிலர் இலகுவில் அதிகாரங்களைக் கைவிடமாட்டார்கள். மாற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்கு அவர்கள் அனைத்தையும் செய்வார்கள். ஆயினும் நாட்டு மக்கள் அவர்களை விடவும் வலுவானவர்கள். ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக மாறுவதன் ஊடாக அந்தச் சிறிய குழுவைவிடவும் வலுவானவர்களாக நாம் மாறுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# புத்திசாலித்தனமாக சிந்தித்து வாக்கிடுக



## பொன்சேகா அறிவுரை

கொழும்பு, மார்ச் 19

எதிர்வரும் தேர்தலில் அரசியல்வாதிகளின் கடந்த காலத் தவறுகளை ஆராய்ந்து மக்கள் வாக்குகளைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளிடம் ஏமாறாமல், நாட்டின் எதிர்காலத்தை சிந்தித்துச் செயற்படுபவர்களுக்கு மக்கள் வாக்குகளை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கட்சியின் முடிவே இறுதியான முடிவு



## நாமல் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 19

ஒவ்வொரு கட்சிக்குள்ளும் தேர்தலை விரும்புவர்களும், விரும்பாதவர்களும் இருப்பார்கள். ஆனால் கட்சியின் முடிவே இறுதியானதாக இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் மக்களின் உண்மையான கருத்தை அறிந்து கொள்ளலாம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# ஆங்கிலம் கட்டாயம்

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆங்கில மொழிக் கல்வியைக் கட்டாயமாக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்று முதல் 13வரையான மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி கட்டாயமாக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கட்சி தாவவுள்ள ஐ.ம.ச. எம்.பி.க்கள்

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அணி ஒன்று கட்சியை விட்டு விலகும் தீர்மானத்தில் உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஹர்ஷ டி சில்வா, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, ரோஹினி கவிரத்ன, தலதா அத்துக்கோரல ஆகியோரே கட்சியை விட்டு விலகும் எண்ணத்தில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. இவர்கள் மேலும் சிலரை இணைத்துக்கொண்டு ஆளுங் கட்சிப் பக்கம் தாவலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் சில வாரங்களுக்குள் இந்த மாற்றம் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

# பரப்புரைகளுக்கு தனியார் பஸ்கள்

கொழும்பு, மார்ச் 19

அரசியல் கட்சிகளின் தேர்தல் பரைப்புரைகளுக்காகத் தனியார் பஸ்கள் வழங்கப்படும். ஆனால் பஸ்களில் ஸ்டிக்கர் அல்லது சுவரொட்டிகள் ஒட்ட அனுமதி வழங்கப்படாது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரைகளுக்காக பஸ்களை வாடகைக்கு எடுக்கும் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிகள் பஸ்களின் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'அரகலய' போராட்டம் நடந்த காலத்தில் சேதப்படுத்தப்பட்ட தனியார் பஸ்கள் இன்னமும் சரிசெய்யப்படாதுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# அச்சுறுத்தல் இல்லாதவர்களுக்கு பாதுகாப்பை நீக்க ஆலோசனை

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில், உயரடுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அரசியல்வாதிகள் உட்பட முக்கியஸ்தர்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை அரச புலனாய்வுச் சேவையிடம் கோரியுள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நபர்களுக்குப் பாதுகாப்புக்கென சுமார் 5 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தேவையற்ற வகையில் பாதுகாப்புக்கென வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் அதிலிருந்து விரைவில் நீக்கப்படுவார்கள் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# புதினம் தெரியுமோ?

அச்சாணி இல்லாத வண்டில் முச்சாணும் ஓடாது. அதால எல்லாரும் வண்டிலை ஓடவிடாமல் செய்ய எப்பிடியாவது அச்சாணியைப் பிடுங்கி எறியிரவேலையைத்தான் முதலில பாப்பினம். இது தனிய வண்டிலுக்கு மட்டுமில்லை, போராட்டங்களுக்கும் பொருந்தும். பொதுவா ஏதும் போராட்டங்கள் நடந்தால். அதில முன்னுக்கு நிக்கிறவையை தங்கட பக்கம் இழுக்கிறவேலையைத்தான் அதிகாரமுள்ளவை பாப்பினம். அதுக்கும் ஆள் மசியாட்டி வெருட்டிப் பாப்பினம். அதுவும் சரிவராட்டி, எப்பிடியாவது அந்த ஆளை தூக்கிற வேலையைச் செய்வினம். தூக்கிறது எண்டதின்ர அர்த்தம் கொலை செய்யிறது மட்டுமில்லை, பதவியில இருந்து அகற்றுறது. இடத்தை மாத்துறதும் வரும். அப்பிடி ஒரு போராட்டத்தில முன்னுக்கு நிண்ட ஒருத்தர் அந்த இடத்தில இருந்து தூக்கப்பட்டிருக்கிறார்.

கிளிநொச்சி, பூநகரி - கிராஞ்சியில சிமெந்துக் கொம்பனி போடுறதுக்கு அங்கத்தைச் சனங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிச்சு போராடி வருகினம். இந்த சிமெந்துக் கொம்பனிக்கு, பொன்னாவெளியில இருந்துதான் சுண்ணக்கல் அகழப்போயினம். அப்பிடி அகழ்ந்தால் உவர்நீர் கூடி, அங்க நல்லதண்ணியே இல்லாமல் போடும். விவசாயமும் செய்யமுடியாமல் தரை சவராப் போடும். இதைத் தடுக்கிறதுக்காகப் போராடுற சனத்துக்கு முன்னுக்கு நிண்டு தோள் குடுத்தவர் பூநகரி வலைப்பாட்டில கத்தோலிக்க பங்குத்தந்தையா இருக்கிறவர்தான். அவர் இருக்கும் வரைக்கும் சனம் போராடிக்கொண்டிருக்கும் எண்டு அதிகாரமுள்ளவைக்கு விளங்கிட்டுது. அவரை விலைக்கு வாங்கவும் முடியாது, வெருட்டவும் முடியாது. அதால அவரை அந்த இடத்தில இருந்து தூக்கோணும் எண்டு முடிவெடுத்திருக்கினம். வடக்கில உள்ள அமைச்சர்தான் அவரை அகற்றவேணும் எண்டதில மும்முரமா நிண்டவர். இது அந்தப் பங்குத் தந்தைக்கும் நல்லாத் தெரியும். அதால இந்த விசயத்தை அவர் பகிரங்கமா செய்தியாளர் சந்திப்பிலையும் சொன்னவர். இப்ப அவர் சொன்னது உண்மையாபோட்டுது. போனகிழமை நடந்த பாலைதீவு அந்தோனியார் திருவிழாவோட அவர் தன்ர பதவியில வெளியேறிட்டார் எண்டு கதை அடிபடுகுது.

இதுக்கு என்னெண்டு ஆயர் இல்லம் விட்டது? எண்டும் சனத்திட்ட கேள்வி இருக்கு. ஆனால், தீவகத்தில இப்பிடிச் சனத்துக்காகப் போராடின ஜிம் பிறவுண் அடிகளுக்கு என்ன கதி நடந்ததெண்டு எல்லாருக்கும் வடிவாத் தெரியும். அப்பிடி இந்தப் பங்குத்தந்தைக்கும் நடந்திடக்கூடாது எண்டதுக்காகத்தான் இப்பிடி அவரை அந்த இடத்தின்ர பங்குத்தந்தை எண்ட பதவியைத் தூக்க யாழ்ப்பாண ஆயர் இல்லமும் ஓமெண்டு சொல்லியிருக்கலாம் எண்டும் சொல்லுப்படுகுது. எப்பிடியோ பொன்னாவெளிச் சனத்துக்கு அந்தப் பங்குத்தந்தை அங்கை இருந்து போனது பெரிய இழப்புத்தான். அந்தப் பங்குத்தந்தைதான் அவைக்கு முழு சப்போர்ட்டா முன்னுக்கு நிண்டவர். இப்ப அந்த மலையையே அசைச்சதால, பொன்னாவெளிச் சனங்கள் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் அந்தரிக்கினமாம். நல்லதுக்கு காலமில்லை கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 88 வீதமான வாக்குகளுடன்

# புடின் வெற்றி!

### 2030 வரை பதவியில் தொடர்வார்



**மொஸ்கோ, மார்ச் 19**

**கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ரஷ்ய அதிபர் புடின் மீண்டும் வெற்றிபெற்றுள்ளார்.**

கடந்த வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய மூன்று நாள்கள் ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. உக்ரைனின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்கள் ஆர்வத்துடன் தேர்தலில் வாக்களித்தனர். சுமார் 88 வீதமான வாக்குகளைப் பெற்று புடின் வெற்றிபெற்றுள்ளார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிராக 2022ஆம் ஆண்டில் உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை புடின் ஆரம்பித்தார். இந்தப் போரில் உக்ரைனின் எல்லைப் பகுதியில் உள்ள நான்கு நகரங்கள் ரஷ்யப்படைகளால் கைப்பற்றப்பட்டு அவை ரஷ்யாவுடன் நிலவழியாக இணைக்கப்பட்டன. அந்தப் பகுதிகளிலும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பகுதி மக்களும் புடினையே ஆதரித்துள்ளனர் என்று ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் நேட்டோ நாடுகள் தங்களின் கூட்டணியைப் பலப்படுத்திவரும் பின்னணியில் புடினின் வெற்றி உலக அரசியலில் பரபரப்பாக மாறியுள்ளது. புடினின் வெற்றி, உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்யர்கள் வழங்கியுள்ள அங்கீகாரத்தின் வெளிப்பாடு என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## போலியான செய்திகளால் ஜனநாயகத்துக்கு சவால்!

சியோல், மார்ச் 19

போலியான செய்திகள் மற்றும் செயற்கை தொழில்நுட்பம் தொடர்பான பொய் செய்திகள் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன என்று தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் தெரிவித்துள்ளார். (ம)

## பிரான்ஸில் தற்போது சிறை நெருக்கடி!

பரிஸ், மார்ச் 19

பிரான்ஸில் தொடர்ச்சியாகக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் விளைவாக சிறை நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரான்ஸில் ஒரே நேரத்தில் 62 ஆயிரம் கைதிகளைச் சிறைவைக்கக்கூடிய வசதிகளே காணப்படுகின்றன. இந்த நிலையில் தற்போது 76 ஆயிரத்து 258 கைதிகள் அங்குசிறைவைக்கப் பட் டுள்ளனர். இது கடந்த வருடத்தைக் காட்டிலும் 5.5 வீதம் அதிகமாகும்.

'பிரான்ஸில் தற்போது ஏற்பட்டுள்ள சிறை நெருக்கடி கடந்த பல ஆண்டுகளாக இல்லாத புதுப் பிரச்சினை. சிறை நெருக்கடி நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றது. இந்தப் பிரச்சினையை நிவர்த்திப்பதற்குப் பல்வேறுபட்ட தீர்வுகளை அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது' என்று பிரான்ஸின் சிறைத்துறை தெரிவித்துள்ளது.

மேற்கத்தேய நாடுகளில் அண்மைக்காலமாக சிறை நெருக்கடி நிலைமை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 35 கடற்கொள்ளையர் இந்தியாவால் கைது!

ஆபிரிக்கா, மார்ச் 19

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட சரக்குக் கப்பலொன்று இந்தியக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளது.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் 17 பணியாளர்களுடன் சரக்குக் கப்பலொன்று அண்மையில் கடத்தப்பட்டது. அந்தக் கப்பலில் 35 கடற்கொள்ளையர்கள் இருந்தனர். கப்பலில் இருந்து ஆபத்து சமிக்ஞை வெளிப்பட்டதையடுத்து அந்தக் கப்பலை சோமாலியக் கடற்கொள்ளையர்கள் கடத்தியிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து இந்தியக் கடற்படை மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகவே அந்தக் கப்பல் மீட்கப்பட்டுள்ளது. கப்பலில் இருந்த 35 கடற்கொள்ளையர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏடன் வளைகுடாவில் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட வர்த்தக கப்பலொன்றை சர்வதேசக் கடற்படை மீட்டுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகுமென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## சீனாவில் காட்டுத்தீ



பீஜிங், மார்ச் 19

சீனா சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயைத் தொடர்ந்து 11 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிச்சுவான் மாகாணத்தில் பைசி என்ற கிராமத்துக்கு அருகே உள்ள வனப்பகுதியில் ஏற்பட்ட இந்தக் காட்டுத்தீ விரைவாக பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது. தீயைக் கட்டுப்படுத்துவதற்காக சுமார் 60 ஹெலிகொப்டர்களிலும், விமானங்களிலும், தீயணைப்பு வாகனங்களிலும் தீயணைப்புப் படையினர் தீவிரமாகப் போராடுகின்றபோதிலும் தீ இன்னமும் கட்டுக்குள் வரவில்லை. இதையடுத்தே முன்னேற்பாட்டு நடவடிக்கையாக 11 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். காட்டுத்தீயால் இதுவரை மனித உயிரழப்புக்கள் எதுவும் பதிவாகவில்லை. அவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், நூற்றுக்கணக்கான வனவிலங்குகள் உயிரிழந்துள்ளன. பெருமளவு பொருளாதாரப் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. (ம)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் பெருமை உண்டு. உறவினர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக் கூடும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய வேண்டிவரும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பூனைக்கு விளையாட்டு...

இலங்கைக்கு கச்சதீவை தாரைவார்த்துக் கொடுத்தது காங்கிரஸும், தமிழகத்தை ஆளும் தி.மு.க.வும் தான் என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றார் பாரதப் பிரதமரான மோடி. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால்கைதுசெய்யப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும்நிலையிலேயே இவ்வாறானதொரு கருத்தை - குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார் மோடி. இதற்கு, கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பதில் தி.மு.க.வுக்கு உடன்பாடில்லை, கச்சதீவு விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை தி.மு.க. அதை அன்றுமுதல் இன்றுவரை எதிர்த்தே வருகின்றது என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் பதில் வழங்கியிருக்கின்றார். இருவரும் பரஸ்பரம் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், 'கச்சதீவு இந்தியாவிடம் இருந்திருக்கவேண்டும்' என்ற கருப்பொருளில் அவர்கள் ஒன்றிப்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

தமிழக மீனவர்கள் இலங்கைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றமையால் ஈழ மீனவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்கள் பொருளாதாரப் பாதிப்பையும் வருவாய் இழப்பையும் சந்தித்து வருகின்றனர். இந்தியாவின் இயந்திரப் படகுகளால் குடாநாட்டு மீனவர்களின் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய வலைகள் பயன்படுத்தப்படமுடியாதவாறு அறுத்தெறியப்படுகின்றமை இன்றோ அல்லது நேற்றோ இடம்பெறும் சம்பவங்களல்ல. ஆதலால், இவ்வாறான அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஈழ மீனவர்களும், இலங்கைக் கடற்படையினர் தம்மைக் கைதுசெய்யக்கூடாது என்று தமிழக மீனவர்களும் வலியுறுத்திவரும் பின்னணியில், 'கச்சதீவின் உரிமமாற்றம்' தொடர்பான மோடியினதும் ஸ்டாலினதும் குற்றச்சாட்டுகளும் கருத்துமோதல்களும், அத்துமீறிய மீன்பிடிக்கான ஆரோக்கியமான தீர்வு இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றன. ஏனெனில், 'கச்சதீவை வழங்கியிருக்காவிட்டால் தமிழக மீனவர்களின் இன்றைய அத்துமீறிய மீன்பிடி சட்டபூர்வமானதாக இருந்திருக்கும்' என்ற விவாதப்புள்ளியில் இருவரும் ஒன்றிணைகின்றனர்.

இந்தியாவிலும் இலங்கையிலும் இப்போது தேர்தல் காலம். இந்திய மக்களவைத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து 'இன்டியா கூட்டணி' என்ற பெயரில் ஒன்றித்திருக்கின்றன. இந்தக் கூட்டணி ஒவ்வொரு மாநிலத்திலும் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்குப் பல்வேறுபட்ட வியூகங்களைத் தனித்தனியாக வகுத்து வைத்திருக்கின்றது. பஞ்சாப்பில் விவசாயிகள் போராட்டம், காஷ்மீரில் யூனியன் அதிகாரம் என்றுசெல்லும் இந்தப் பட்டியலில் தமிழகத்தின் 'பேசுபொருளாக' அமைந்திருப்பது மீனவர்களின் பிரச்சினை. இலங்கைக் கடற்படையினரின் தொடர் கைதுகளுக்கு எதிராகத் தமிழக மீனவர்கள் தற்போது முன்னெடுக்கும் போராட்டம் முற்றுமுழுதான அரசியலாக அங்கு மாற்றப்பட்டுள்ளது. 'இலங்கைக்குள் எல்லைதாண்டாதீர்கள்' என்று சொல்வதற்குப் பதிலாக, 'கச்சதீவு இருந்திருந்தால் இது சட்டபூர்வமான மீன்பிடிதானே' என்ற எண்ணம் மீனவர்களிடத்தில் விதைக்கப்படுவதானது அவ்வளவு ஆரோக்கியமான அறிகுறி இல்லை.

குடாநாட்டின் கடற்பரப்புகளில் இனிவரும் காலங்களிலும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் நிறைந்திருக்கும். அவை 'கச்சதீவு எங்களுடையது' என்ற உரிமைக்கோரலின் பாற்பட்டதாக அமைந்திருக்கும் என்பதை நாம் வலுவாக நம்பலாம். இலங்கையிலும், வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை அணுகும் கைங்கரியம் அரசியல் மயப்பட்டதாக மாறிவிட்ட பின்னணியில், ஆலைவாய்க் கரும்பாக நெரிபடப் போவது என்னமோ குடாநாட்டு மீனவர்கள்தான். 'பூனைக்கு விளையாட்டு: சுண்டெலிக்கு சீவன் போகுது'!



### பொதுத்தேர்தல் நடந்தாலும்

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவே முடியாது!

### தேர்தல்கள் ஆணையாளர் திட்டவட்டம்

**கொழும்பு, மார்ச் 19**

**பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்தினாலும், ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கத்தால் பிற்போட முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் தனது ஆயுட்காலத்தில் இரண்டரை ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பின்னர், ஜனாதிபதியால் அதைக்கலைக்க முடியும். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறுவதை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவினுடையது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாகப் பொதுத்தேர்தலை நடத்துவது சவாலானதாக இருக்கும். ஆயினும் எவ்விதமான நெருக்கடி ஏற்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது.

எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் தேர்தலுக்கான நிதியை ஒன்றிணைந்த நிதியத்திலிருந்தே ஒதுக்க வேண்டும். 2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தமுடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தொடர்கின்றது தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 19

சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக ஏராளமான கொள்கலன்கள் சோதனை மையங்களில் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

## இலங்கை வந்தது சொகுசுக் கப்பல்

கொழும்பு, மார்ச் 19

"எம்பியன்ஸ்" என்ற சொகுசுக் கப்பல் ஒன்று நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

தாய்லாந்தில் இருந்து வந்த இந்தக் கப்பலில் ஆயிரத்து 131பயணிகளும், 565 பணியாளர்களும் உள்ளனர். கப்பலில் வந்தவர்கள் கொழும்பு, கண்டி, காலி ஆகிய நகரங்களுக்குச் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சுற்றிவளைப்புக்குள் தென் மாகாணம்

தென் மாகாணத்தை மையமாகக் கொண்டு நேற்றுமுதல் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த விசேட சுற்றிவளைப்புகள் இடம்பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## யாப்பாவுக்கு எதிராக இன்று பிரேரணை

நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்குத் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றுநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

பிரேரணை மீதான விவாதம் இன்று நடைபெற்று, நாளை வாக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, பிரேரணையை வெற்றி கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கு எதிர்க்கட்சிகளும், ஆளும் தரப்பும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. (எ-44)

**நாளை**

20.03.2024

**புதன்கிழமை**

**பங்குனி – 07**

சுபநேரம் : 04 .47 -06.17

ராகுகாலம் : 12.17 – 01.47

**நாளொரு நல்வார்த்தை**

அன்புதான் உன் பலவீனம் என்றால்
இந்த உலகின் மிகச் சிறந்த
பலசாலி நீ தான்.

– அன்னை தெரேசா–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, மன்னாரில் வெள்ளை ஈ தாக்கம் தீவிரம்

கிளிநொச்சி, மார்ச் 19

**கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள பல்லாயிரம் தென்னைகளில், வெள்ளை ஈக்களின் தாக்கம் தீவிரமாக அவதானிக்கப்பட்டுள்ளது.**

கடுமையான வறட்சி, வெப்பம் வெள்ளை ஈக்கள் இலகுவாகப் பரவுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள நிலையில், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்லாயிரம் தென்னைகள் வெள்ளை ஈக்களின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் அதீத வெப்பநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வெள்ளை ஈக்களின் தாக்கம் மேலும்மேலும் அதிகரிக்கும் என்று துறைசார் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். எனவே பொதுமக்கள் மற்றும் பண்ணையாளர்கள் தங்களின் தென்னைகள் மற்றும் இதர பயன்தரு மரங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று அறிவித்துள்ளனர்.

முன்னர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளை ஈக்களின் தாக்கம் தீவிர நிலையை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் நோய்த்தொற்று தீவிரத்தன்மை அடைந்துள்ளமையானது அடுத்தசில மாதங்களில் வடக்கின் தேங்காய் உற்பத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது. (ம-214-56)

## குடிதண்ணீரின்றித் தவிக்கும் கேப்பாப்பிலவு மக்கள்!

அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக முல்லைத்தீவு, கேப்பாபிலவில் குடிதண்ணீரின்றித் தவிக்கும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று கிராமமக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கடும் வறட்சியான சூழல் நிலவுவதன் காரணமாக மாதிரிக் கிராமத்திலுள்ள கிணறுகளில் நீர் வற்றிச் செல்கின்றது.

இராணுவத்தினரின் பிடியிலுள்ள இங்குள்ள மக்கள் காணிகளை விடுவித்தால் எமது காணிகளிலுள்ள கிணறுகளிலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளமுடியும். எமது சொந்தக் காணிகளை விடுவிப்பதுடன் எமது குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கும் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (சு-13)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம் பாலமனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (சு-17)

# பல்தேசியக் கம்பனிகளின் பிடியில் இயற்கைச் சூழல்!

### சமூகச் செயற்பாட்டாளர் செல்வின் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 19

மனிதன் வாழ்கின்ற இயற்கைச் சூழல், மக்களின் கட்டுப்பாட்டுக்குள் அல்லாமல் பல்தேசியக் கம்பனிகளிடம் இருப்பது ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் ஆபத்தை விளைவிக்கும் என சமூகச் செயற்பாட்டாளரும் ஓய்வு நிலை நிர்வாக அதிகாரியுமான செல்வின் தெரிவித்தார்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மீனவர் அமைப்புகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மக்களின் கடற்சூழல் பல்தேசியக் கம்பனிகளிடம் தாரை வார்க்கும் செயற்பாடானது மீனவ மக்களின் வாழ்வியலைக் கடற்சூழலிலிருந்து அப்புறப்படுத்தும் செயற்பாடாக அமைகிறது. யாழ். குடாக் கடலின் வெளிப்புறமான பாக்கு நீரிணையின் பல இடங்களில் பாலங்கள் மற்றும் சிறிய மதகுகள் இடப்பட்டு இயற்கை நீரோட்டங்கள் மறிக்கப்பட்டு வருகின்றன. இதனால் குறித்த கடலை நம்பி வாழ்கின்ற சிறுமீன் பிடியாளர்களின் வாழ்வியல் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதுடன் சிறுகடல் தொழில் வேளாண்மையும் அழிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் கிடைக்கும் உணவுகளிலுள்ள 50 வீதமான புரதம், கடல் உணவிலிருந்தே பெறப்படுகின்றது. யாழ்.குடாவில் நீர்வேளாண்மை என்ற பெயரில் கடலட்டைப் பண்ணைகள், பாசி வளர்ப்புகள் என்பன திணிக்கப்பட்டு வருகின்றன. எமது கடற்றொழில் சமூகத்தையும் அவர்களின் மீன்பிடி முறைகளையும் எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டும் என்றால் கடலைச் சுதந்திரமாகச் சுவாசிக்க விடவேண்டும்-என்றார். (ப-20)

## கும்பிளா, சூடை பிடிபாடு உயர்வு

பாஷையூர் கடலில் மீனவர்களின் வலையில் கும்பிளா, சூடை மீன்கள் அதிகளவில் பிடிபடுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கும்பிளா மீன் பிடிபாடு அதிகரித்துள்ளதால் அவை கூடுதலாக சந்தைகளுக்கு எடுத்து வரப்படுவதுடன் ஒரு கிலோ கும்பிளா மீன் 800 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேவேளை சூடை மீனும் கிலோ 400 ரூபா வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-17)



# பாவனைக்குதவாத உணவுகள் அழிப்பு

சாவகச்சேரி, மார்ச் 19

**மனிதப் பாவனைக்கு உட்படுத்தமுடியாத உணவுப் பொருள்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அண்மையில் அழிக்கப்பட்டுள்ளன.**

சாவகச்சேரிப் பகுதியில் உணவகம் ஒன்றில் குளிரூட்டியில் சேமிக்கப்பட்ட பிட்டு, இடியப்பம் உட்பட 100 கிலோவுக்கும் அதிகமான உணவுப் பொருள்களே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. உணவகத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி உணவகமும் மூடப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ. குணசாந்தன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர், குறித்த நகரப் பகுதிகளிலுள்ள 12 உணவகங்கள் மீது திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

உணவகங்களில், மருத்துவச் சான்றிதழ்கள் இல்லாமலும், தனிநபர் சுகாதாரம் பேணாமலும் ஊழியர்கள் பணியாற்றுவது அவதானிக்கப்பட்டுக் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-9)

## நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று, மதவளசிங்கன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் சங்கம் ஆகியவற்றுக்கான புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் இந்தத் தெரிவுகள் அண்மையில் இடம்பெற்றன. (சு-13)



# மாதகல் இறங்குதுறையை சுத்தப்படுத்தும் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வலி. தென்மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட மாதகல் இறங்குதுறை கடற்கரையை சுத்தப்படுத்தும் செயற்பாடு பிரதேசசபையின் ஒழுங்குபடுத்தலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உதவிச் செயலாளர் திருமதி என். செல்வக்குமாரி கலந்துகொண்டார். வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை செயலாளர், சபை உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தினர், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (எ-125)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு

யாழ்., மார்ச் 19

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில், சிவ நெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து, 'ஆறுதலைத் தருவான் ஆறுமுகன்' என்னும் விடயப்பொருளில் பண்டிதர் த. மனோஜ்குமாரின் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெற்று சொற்பொழிவிலிருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ப)

# குருபூசையும் சொற்பொழிவும்

சாவற்கட்டு, ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையிலான வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் குருபூசை என்பன எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து, சைவப்புலவர் பொன். சந்திரவேலின் 'சிவாலயங்கள் அமைத்துச் சிவத்தொண்டு புரிந்த நாயனார்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு இடம்பெற்று, சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. (ப)


## கண்ணீர் அஞ்சலி



வைரவர் கோயிலடி, நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்
**செல்லத்தம்பி லோகேஸ்வரி**

எமது ஆலயத்தின் இராஜகோபுரத் திருப்பணிச்சபை உறுப்பினரும், ஆலய வளர்ச்சிக்கு தமது குடும்பத்துடன் ஆதரவு வழங்கி வரும் **செல்லத்தம்பி செல்வரூபன்** அவர்களின் அன்புத் தாயார் மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை,
இராஜகோபுரதிருப்பணிச் சபை,
நாரந்தனை, சரவணை, கர்ணந்தோட்டம்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்.**

(CS 28245) S-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



யாழ். அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடக்கு பெரியதம்பிரான் கோவிலடி மாயக்கையை வதிவிடமாகவும் கொண்ட

**இராசையா கணபதிப்பிள்ளை**

அவர்களின்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (20.03.2024) புதன்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், எதிர்வரும் (22.03.2024) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும், கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலும் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாயக்கை, அல்வாய் வடக்கு,
அல்வாய்.**

**குடும்பத்தினர்.**

(CS 28246) A-1

## அரியாலை சனசமூக நிலையம்
## 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெறும் பெரு விளையாட்டுக்கான விண்ணப்பம்

### துடுப்பாட்டம் (20 வயதின் கீழ்)

திரு. திருமதி தேவகி நவரட்ணம் ஆகியோரின் அனுசரணையில்
20 வயதிற்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டப்போட்டி - 2024

- அணிக்கு 8 பேர் 6 பந்து பரிமாற்றங்களைக் கொண்டது
- போட்டியின் போது வயதை உறுதிப்படுத்தும் ஆவணம் கொண்டு வருதல் வேண்டும்

1 ஆம் பரிசு - ரூபா 25000.00
2 ஆம் பரிசு - ரூபா 15000.00

போட்டிக் கட்டணம் - ரூபா 1500.00
தொடர்புகளுக்கு - 0714318064 (ஸ்ரீ.தனுசன்)
0770204134 (S. வினோத்)

விண்ணப்ப முடிவுத்திகதி: 27.03.2024

### துடுப்பாட்டம்

அமரர் ராமப்பிள்ளை சேதுராசா ஞாபகார்த்தமாக லண்டன் வாழ் : M.P நாதன் அவர்களின் அனுசரணையில் வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டப்போட்டி - 2024

- அணிக்கு 7 பேர் 6 பந்து பரிமாற்றங்களைக் கொண்டது.

1 ஆம் பரிசு - ரூபா 50000.00
2 ஆம் பரிசு - ரூபா 30000.00

போட்டிக் கட்டணம் - ரூபா 2000.00
தொடர்புகளுக்கு - 0769028120 (போல் நியூட்டன்)
0770204134 (S. வினோத்)

விண்ணப்ப முடிவுத்திகதி: 27.03.2024

### கரப்பந்தாட்டம் (Over game)

அமரர் உதயசேகரம் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில்
நடைபெறும் Over game முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2024

- அணிக்கு 5 பேர் கொண்ட போட்டியாகும்.

1 ஆம் பரிசு - ரூபா 25000.00
2 ஆம் பரிசு - ரூபா 15000. 00

போட்டிக் கட்டணம் - ரூபா 1500.00
தொடர்புகளுக்கு - 0776013550 (ஐ. கணேசபாலன்)
0770204134 (S. வினோத்)

விண்ணப்ப முடிவுத்திகதி: 27.03.2024

### கரப்பந்தாட்டம் (Set up)

அமரர் திருஞானசுந்தரம் செல்லம்மா மற்றும் அமரர் பாலேந்திரன் மாலினி ஞாபகார்த்தமாக லண்டன் வாழ் திருஞானசுந்தரம் சந்திரசேகரம் அவர்களின் அனுசரணையில் வடமாகாண ரீதியில் நடைபெறும் Set up முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2024

1 ஆம் பரிசு - ரூபா 40000.00
2 ஆம் பரிசு - ரூபா 30000.00

போட்டிக் கட்டணம் - ரூபா 1500.00
தொடர்புகளுக்கு - 0771574478 (ராஜன்)
0770204134 (S. வினோத்)

விண்ணப்ப முடிவுத்திகதி: 27.03.2024

### வலைப்பந்தாட்டம்

செல்வி. தேவலதா காசிப்பிள்ளை அவர்களின் அனுசரணையில்
யாழ்மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2024
யாழ் வலைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள
போட்டியில் பங்குபற்ற முடியும்

1 ஆம் பரிசு - ரூபா 35000.00
2 ஆம் பரிசு - ரூபா 25000.00

போட்டிக் கட்டணம் - ரூபா 1500.00
தொடர்புகளுக்கு - 0776015777 (S.அஜந்தா)
0770204134 (S. வினோத்)

விண்ணப்ப முடிவுத்திகதி: 27.03.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிக்கூட திறப்பு விழா

யாழ்., மார்ச் 19

இணுவில்தெற்கு அருள் ஞானமிகு ஞானலிங்கேஸ்வரர் திருக்கோவிலில், தமிழ் வழிபாட்டுப் பயிற்சிக்கூடத் திறப்பு விழா, நாளை புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப)


## மணமகள் தேவை

லண்டனில்
Computer Science Software Engineering (Infomatik)
படித்த 1993 இல் பிறந்த German Citizenship
உள்ள மணமகனுக்கு,
படித்து முடித்த பண்புடைய
மணமகள் தேவை.

076 881 3648

## கடை வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் உள்ள மாநகர சபைக் கட்டடத்தில் சகல வசதிகளுடன் கடை வாடகைக்கு உண்டு.

- பிற்றிங் செய்யப்பட்டுள்ளது.
- நவீன முறையில் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது.
- தொலைத் தொடர்பு வசதி உண்டு.
- C.C.T கமரா உள்ளது.
- குளிரூட்டி A/C வசதியும் உண்டு.

(CR.41927) J-1

தொடர்பு:- 076 962 4477


## அறிவித்தல்

**யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

ஆகவே இவ் விழாவில் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரையும் இணைத்து நடத்துவதற்கு உள்ளோம். இது வரை அங்கத்தவராக இணையாதவர்கள் தங்களின் பின்வரும் விபரங்களை **அதிபர், யா/ டிறிபேக் கல்லூரி சாகவகச்சேரி** என்ற முகவரிக்கு அல்லது **077 895 5636** வட்சப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* முழுப்பெயர் : -......................
* முகவரி : -......................
* தொலைபேசி இல. : -......................
* வட்சப் : -......................
* படித்த ஆண்டு : -......................
* சேவையாற்றிய ஆண்டு : -......................

**திரு.செ. பேரின்பநாதன்**
**தலைவர்**

**திரு.ம. ஸ்ரீபாஸ்கரன்**
**செயலாளர்**

(cr.41940) (N-1)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2024/2025
## (அணி –I)

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. முன்பள்ளி ஆசிரியராக இருத்தல் வேண்டும்.
2. அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றுள் ஆகக்குறைந்தது ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியைக்கொண்டிருத்தல் வேண்டும்.
3. அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) அல்லது அதற்கு சமனான வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **கற்கைநெறிக் காலம்** | - | இரண்டு வருடம் (நான்கு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்) |
| **மொழிமூலம்** | - | தமிழ் |
| **கற்கை நிலையங்கள்** | - | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| **கற்கைநெறிக் கட்டணம்** | - | திறமை அடிப்படையிலான முழுமையான புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்படும் (அனுசரணை - கல்வி அபிவிருத்திக் குழுமம்) |
| **விண்ணப்பப்படிவக் கட்டணம்** | - | ரூபா 500.00 |


விண்ணப்பப் படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் மக்கள் வங்கிக் கிளை கணக்கிலக்கம் 890012520003565 இற்கு விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் ரூபா. 500.00 இனைச் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை இணைத்து, **உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி** எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2024/2025 (அணி–1)"** எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 10.04.2024**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
18/03/2024

(CR.41941) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 22.02.1948 மறைவு 13.03.2024

## அமரர்
## விக்கினேஸ்வரன் பரமானந்தி (விக்கி)

யாழ் கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மீசாலையை வதிவிடமாகவும், பிரான்ஸ் Noisiel ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் பரமானந்தி அவர்கள் 13.03.2024 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற பரமானந்தி-சின்னம்மா (டென்மார்க்) தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நல்லம்மா அவர்களின் ஆருயிர்க் கணவரும், திருலீகரன் (ராஜன் இலங்கை), திலீபன், ரஜீபன் (சசி), அகல்யா (விஜி), சரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராதிகா (இலங்கை), அபிராமி, உமாதேவி, பிரபாகரன், அனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலக்ஷன், திவ்வியன், ரவீனா, திருசா, ரம்மியா, மருசன், லக்ஷன், அம்சன், நிலவன், நிலவன்யா, அபிஷன், அன்பரசன், அனுஷன், கரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரன், விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நாகம்மா (இலங்கை), இராசம்மா (இலங்கை), இராசையா (பிரான்ஸ்), பூரணம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் வியாழன் காலை 9.00 AM-11.00 AM மணிவரை 739 Rue marcel paul, 94500 Champigny-Sur-Marne, France இல் இடம் பெற்று தகனக்கிரியை 11.30 AM மணியளவில் 560 Avenue Maurice Thorez, 94500 Champigny-Sur-Marne, France இல் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| சின்னம்மா-தாய் | : 045 4225 9758 |
| நல்லம்மா-மனைவி | : 033 6693 22588 |
| ராஜன்-மகன் | : 094 7715 20297 |
| திலீபன்-மகன் | : 033 7580 07021 |
| றஜி-மகன் | : 033 7696 56674 |
| விஜி-மகள் | : 033 6525 32881 |
| சரு-மகன் | : 033 7688 31963 |
| துசி-பெறாமகன் | : 033 6988 20701 |
| பிரபா-மருமகன் | : 033 7699 04404 |
| [illegible] | : 033 6500 19004 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 41942) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு!

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், 'பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடலும், ஆற்றுகை நிகழ்வும்' பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

பூநகரி பிரதேச செயலாளர் த. அகிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிறிஸ்தவ அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர்கள், பூநகரி மற்றும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச கலைஞர்கள், பண்பாட்டுப் பேரவையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-13)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில், 'கிறிசலிஸ்' நிறுவனத்தால் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களின் ஊடாக அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தல்' என்ற கருத்திட்டதின் ஓர் அங்கமாக , 'அணிதிரட்டல் மற்றும் தொடர்பாடல்' எனும் தலைப்பில் விசேட வலுவூட்டல் பயிற்சிப்பட்டறை ஒன்று அரியாலை, புங்கங்குளம் சந்தியிலுள்ள தனியார் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.


நிகழ்வில் 'கிறிசலிஸ்' நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் , யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முன்னாள் பெண் உறுப்பினர்கள் ஒன்றியம் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளன உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159)



# கிளிநொச்சியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த சித்த மருத்துவ முகாம் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரக உயர் அதிகாரி மனோஜ்குமார் கலந்துகொண்டார்.

மருத்துவமுகாமில் சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் பங்கேற்று இலவச பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகளைப் பெற்றுக்கொண்டதுடன் அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ச-27)



வவுனியா, பூந்தோட்டம் கல்வியியற்கல்லூரி வீதியில், இளைஞர்களால் சிரமதானப்பணி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. ஸ்ரீநகர் கிராம மக்களால் முன்னெடுக்கப்பட்ட குறித்த சிரமதானப்பணியில் அயற்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் இந்திய இலங்கை நட்புறவுக் கழகமும் இணைந்து முன்னெடுத்த சிலப்பதிகார விழா, காலை மற்றும் மாலை என இரு அமர்வுகளாக நல்லூரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. காலை அமர்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் 'சிலப்பதிகாரம் மக்கள் வாழ்வியற் காப்பியம்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகைசால் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையிலான உரை அரங்கம் இடம்பெற்றது. மாலை அமர்வு நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நடனத் துறை முனைவர் செ.கற்பகம் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். (ப-66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுக்குநாறியில் கைதானோர் விடயம்

# இரு அதிகாரிகள் வவுனியா வருகை

மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விவகாரத்தில் கைது செய்யப்பட்டோர் குறித்து ஆராய்வதற்கு ஏற்கனவே 2 அதிகாரிகள் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும், இவ்விவகாரம் தொடர்பில் வவுனியா பிராந்திய அலுவலக ஒருங்கிணைப்பாளரின் அறிக்கை நாளைமறுதினம் கிடைக்கப்பெறும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான பேராசிரியர் ரி.தனராஜ் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)


# தவறான முடிவெடுத்தவர் மருத்துவமனையில் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 19
தவறான முடிவெடுத்த ஒருவர் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார்.
இருபாலை கிழக்கைச் சேர்ந்த 61 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
வீட்டில் நேற்றையதினம் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்க முயன்றுள்ளார். இருப்பினும் அதனைக் கண்ட உறவினர்கள் அவரைக் காப்பாற்றி கோப்பாய் மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் சேர்க்கப்பட்ட சில மணி நேரத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஒ-27)

பாடசாலை நாளில்

# இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 19
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/160 கிராம அலுவலர் பிரிவில் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை நாளில் வழமையாக இவ்வாறான நிர்வாகத் தெரிவுகள் நடத்தப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள இளையோர், இன்றைய தெரிவை ஒத்திவைத்து ஞாயிற்றுக்கிழமை நடத்தவேண்டும் என்று கோரியுள்ளனர்.
ஜே/160 கிராம அலுவலர் பிரிவில் இளைஞர் கழக நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நடத்தாமல் சிலர் தமது பெயர்களை எழுதி தாமே நிர்வாகம் என்ற அடிப்படையில் பதிவுகளை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் ஏற்கனவே இளைஞர் கழகத்தை நடத்திய இளைஞர்கள், நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தை நடத்தி நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறு கோரிக்கை முன்வைத்தனர்.
இந்நிலையில் இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இளைஞர் கழகம் 14 தொடக்கம் 29 வயதுடையவர்களை உள்ளடக்கியது. ஆனால் இன்று பாடசாலை நாள் என்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியாத நிலைமை காணப்படுகின்றது. ஏனைய இளைஞர், யுவதிகளும் தங்களது தொழில் நிமித்தமாகச் செல்லும் நிலைமையும் காணப்படுகிறது. எனவே ஞாயிற்றுக்கிழமை நிர்வாகத் தெரிவை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
இதுவரை நடைபெற்ற பிரதேச இளைஞர் சம்மேளன நிர்வாகத் தெரிவுக் கூட்டங்களோ அல்லது மாவட்ட சம்மேளன நிர்வாகக் கூட்டங்களோ ஞாயிற்றுக்கிழமைகளிலேயே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-27)



முல்லைத்தீவு, முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக கார்மாரம்ப கிரியைகளு டன் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. காட்டு விநாயகப் பெருமானுக்கு ஒன்பது தளங்கள் கொண்ட இராஜகோபுரம் புதிதாக அமைக்கப்பட்டு புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. நேற்றுமுன்தினமும், நேற்றும், இன்றும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறுகின்றது. (ப-19)

விளையாட்டுப் போட்டிகள்

# புத்தாண்டுவரை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 19
பாடசாலைகளில் நடைபெறும் இல்லவிளையாட்டுப் போட்டிகளை தமிழ், சிங்களப் புத்தாண்டுவரை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுத் தெரிவித்தார். நாட்டில் நிலவும் கடும் வெப்பத்துடனான காலநிலை நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், மாகாண அதிகாரிகள் ஊடாக இது தொடர்பான அறிவித்தல் அனுப்பப்படும் எனவும் அவர் கூறினார். (அ-ஒ-44)

கண்ணீர் அஞ்சலி



சமூக நற்பணியாளர் திரு. வில்வநாதன் ஐயா
[ஓய்வுநிலை அதிபர் - தாதிய பயிற்சிக் கல்லூரி]
அவர்களின் பாசமிகு மாமியார்:
அமரர் லோகேஸ்வரி செல்லத்தம்பி
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
"வையத்து வாழ்வுதனை வளர் சீராய் கொண்டு
தெய்வத்துள் சென்றமர்ந்த தாய்க்கு எம் வணக்கங்கள்"
பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்
BL Group of Companies (PVT) Ltd.
(CS 28249) S-1

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# யாழ். பல்கலையில் இன்று போராட்டம்!

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக ஊழியர்களால் இன்று பணிப்புறக்கணிப்பும் கவனவீர்ப்புப் போராட்டமும் மேற்கொள்ளப்படவுள்ளன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்தப் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஊதிய உயர்வை உறுதிப்படுத்துமாறும், சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குமாறு கோரியும் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இன்றையதினம் இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் இந்தப் போராட்டம் ஏற்பாடாகியுள்ளது. இந்தப் போராட்டம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

சந்தேகத்தில் கைதாகியுள்ளனர். மொத்தமாக 18 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு, வடக்கு மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன வழங்கியுள்ள பதிலின் அடிப்படையில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது. பொலிஸ் பிராந்தியங்கள் ரீதியாக இந்த மோசடிகள், முறைப்பாடுகள், நடவடிக்கைகள் குறித்த விவரம் வருமாறு-

**யாழ்ப்பாணம்**
**முறைப்பாடுகள்** - 3
**மோசடி** - 36 இலட்சம் ரூபா
**கைது** - ஒருவர்

**காங்கேசன்துறை**
**முறைப்பாடுகள்** - 3
**மோசடி** - 40 இலட்சம் ரூபா
**கைது** - இருவர்

**மன்னார்**
**முறைப்பாடுகள்** - 11
**மோசடி** - 380 இலட்சம் ரூபா
**கைது** - இருவர்

**வவுனியா**
**முறைப்பாடுகள்** - 45
**மோசடி** - 790 இலட்சம் ரூபா
**கைது** - 18 பேர்

**முல்லைத்தீவு**
**முறைப்பாடுகள்** - 6
**மோசடி** - 269 இலட்சம் ரூபா
**கைது** - ஒருவர்

**கிளிநொச்சி**
**முறைப்பாடுகள்** - 11
**மோசடி** - 281 இலட்சம் ரூபா
**கைது** - 10 பேர்

(ஓ.5)

## தமிழ்க்கட்சியினர்...

இதுதொடர்பாக அவர் நேற்றுத் திங்கட்கிழமை மாலை ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெரும்பான்மையான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொள்கையளவில் உடன்பட்டிருந்தாலும் ஜனாதிபதியைச் சந்தித்து உடனடியாகக் கைதிகள் விடுதலை, வழிபாட்டுரிமை, இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருக்க உத்தரவாதம், அத்துமீறிய பொலிஸார் மீது நீதி விசாரணை போன்றவற்றை வலியுறுத்துவது எனவும் அதன் பின்னரே முடிவை அறிவிக்க உத்தேசித்துள்ளமையை ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தன.

அதேநேரம் எதிர்வரும் நாட்களில் சபாநாயகர் மீதான பிரேரணை மற்றும் வாக்கெடுப்பு நடைபெற உள்ளமையால் அது முடிவடைந்த பின் தமிழ்க் கட்சிகள் ஒருமித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு இந்த விவகாரத்தில் வரும் என நம்புகின்றோம்.

அதேநேரம் புறக்கணிப்பு முடிவை எமது வேண்டுகோளை ஏற்று ஏலவே அறிவித்த கட்சிகளுக்கும், ஆலோசித்த கட்சிகளுக்கும், செவ்வனே விடயங்களைத் தொடர்ச்சியாக இவ் விடயத்தில் ஈடுபாட்டுடனான பங்களிப்புடன் கொண்டு செல்லும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

சிவராத்திரியன்று கைதாகிச் சிறையில் வாடும் சிவனடியார்களை விடுவிக்க முடிந்தவரை தமிழ்ச் சட்டத்தரணிகள் வவுனியா நீதிமன்றில் இன்று முன்னிலையாகி வலுசேர்க்கவேண்டும் எனவும் அன்புரிமையுடன் கேட்டு நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஓ-66)

# வள்ளத்துக்கு வாய்த்த சூடை; கரைக்கு எட்டவில்லை

## வடமராட்சியில் சோகம்

பருத்தித்துறை, மார்ச் 19

கடற்றொழில் நடவடிக்கையின்போது சுமார் 5 ஆயிரம் கிலோவுக்கு அதிகமான சூடை மீன்கள் வலையில் பிடிப்பட்ட நிலையில் பகுதி பகுதியாகக் கரைக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சியின்போது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படகில் இருந்த இரு மீனவர்களும் நீண்ட போராட்டத்துக்கு மத்தியில் நீந்திக் கரை மீண்ட சம்பவம் வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது.

பொலிகண்டி மீன்பிடித்துறையிலிருந்து வழமை போன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அதே பகுதியைச் சேர்ந்த சுதாகரன் என்ற மீனவர் மீன்பிடிக்கச் சென்றிருந்தார். கரையில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் வலைகளை விரித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட அவரின் வலையில் 5 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான சூடை மீன்கள் சிக்கி இருந்தன.

வலைகள் நிறைந்து வழியும் அளவுக்கு சூடை மீன் பிடிபட்டிருந்த நிலையில் ஒரே தடவையில் கரைக்குக் கொண்டுவர முடியாதிருந்தது. இதனைத் தொடர்ந்து கரையிலிருந்த உறவினரான தீபநாதனின் படகு வரவழைக்கப்பட்டு மீன்களைப் பகுதி பகுதியாகக் கரைக்கு கொண்டு செல்ல முயற்சி எடுக்கப்பட்டது.

இதன்போது மீன் ஏற்றி புறப்பட்ட படகு நீண்ட நேரமாகக் கரைக்கு வரவில்லை. இதனை அடுத்து மாலையில் சக மீனவர்களால் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டபோது ஒரு மீனவர் இரவு கரையை வந்து சேர்ந்துள்ளார். மற்றைய மீனவரைக் காணாத நிலையில் தொடர்ந்து தேடுதல் நடத்தியபோது நேற்று திங்கட்கிழமை அதிகாலை தொண்டைமானாறு பகுதியில் அவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளார்.

படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் படகும் வெளியிணைப்பு இயந்திரமும் கடலில் வீழ்ந்து மூழ்கியுள்ளன.

கடலில் படகு கவிழ்ந்த நிலையில் கடலில் வீழ்ந்து காணாமல் போயிருந்த மீனவர் சுமார் 12 மணித்தியாலங்களுக்கு மேலாக கடலில் நீந்தி நேற்று திங்கட்கிழமை அதிகாலை கரை சேர்ந்து உயிர் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-100)

## ஜனாதிபதித்...

அறிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படுமா அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா என்பது குறித்த ஊகங்கள் பரவலாக எழுந்துள்ள நிலையில், அமைச்சரவையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும். எனவே அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ஓ-இ)

## வெடுக்குநாறி...

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிஸாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றிலில் இன்று மதியம் 12 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை - திருகோணமலையில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-66)

## பேருந்தின்...

வரே உயிரிழந்துள்ளார். பூவரசங்குளம் சந்தியிலுள்ள பேருந்துத் தரிப்பிடத்திலேயே நேற்றுக்காலை இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வவுனியாவிலிருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து, தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது. அந்தப் பேருந்தில் ஏறுவதற்காக வீதியின் மறு பக்கத்திலிருந்து ஒருவர் வந்துள்ளார். பேருந்தின் முன்பக்கமாக வந்த பயணியைக் கவனிக்காமல் சாரதி பேருந்தை இயக்கியமையால், பயணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (அ-ஓ-18-110)

## நாடாளுமன்...

வெடுக்குநாறிமலையில் சிவராத்தியன்று 8 பேர் கைதான வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் இன்று நடக்கவுள்ளது. இதற்கிடையில் அவர்கள் மீதான குற்றப்பத்திரத்தில் திருத்தம் செய்து, பிணையில் விடுவிக்க நடவடிக்கையெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோர தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்திருந்தனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு நேரம் ஒதுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டிருந்தார். என்றாலும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க ரணில் உடனடியாக நேரம் ஒதுக்கவில்லை. நாளை புதன்கிழமை மு.ப. 11 மணிக்கே சந்திப்புக்கு நேரம் ஒதுக்கியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நகர்வு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பின்னணியில் இன்று காலை நாடாளுமன்றத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். இதில் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஓ-இ)

## யாழுக்கு...

பாதுகாப்புத் தரப்பினர் ஆக்கிரமித்திருந்த காணிகளில் பலாலியில் 278 ஏக்கர் காணிகளை மாத்திரம் மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு பலாலியில் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அரச காணிகளில் வசிப்போருக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு பலாலியில் பிறிதொரு இடத்தில் இடம்பெறவுள்ளது. விவசாயி களுக்காக விவசாயத் திணைக்களம் உருவாக்கிய மென்பொருளின் அங்குரார்ப்பண நிகழ்வும் பலாலியில் இன்னுமொரு இடத்தில் நடைபெறவுள்ளது. இறுதியாக மந்திகை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த 4 நிகழ்வுகளிலும் பங்கேற்கவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## கிணற்றிலிருந்து...

நீரிறைக்கும் மோட்டரை இயக்கியுள்ளார். மோட்டரில் பூட்டப்பட்டிருந்த குழாய் கழன்றுள்ளது. அதைப்பூட்ட முயற்சித்தபோது கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளார்.

மோட்டர் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயலவர்கள் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது இளம்பெண் கிணற்றில் வீழ்ந்திருப்பதை அவதானித்து, அவரை கிணற்றிலிருந்து மீட்டு, மருத்துவமனையில் சேர்த்தபோது, உயிரிழந்துவிட்டார்" என பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஓ-18-110)

## யானை...

வந்த யானை தாக்கியுள்ளது. படுகாயமடைந்த அவர் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

தனபாலகே அநுர தென்னக்கோன் (வயது-63) என்பவரே உயிரிழந்துள்ளார். (அ-ஓ-18-110)

## போராட்டம்...

இதனால் மருத்துவமனைகளில் சகல செயற்பாடுகளும் வழமைபோல நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு தாரைவார்ப்புக்கு தி.மு.க. கடும் எதிர்ப்பே!

## அண்ணாமலையின் கருத்துக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் பதில்

**சென்னை, மார்ச் 19**

**கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்க்கும் முயற்சிகளை தி.மு.க. அரசு கடுமையாக எதிர்த்தது. தி.மு.க.வின் எதிர்ப்பை மீறியே கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கைக் கடற்படை அவர்களைத் தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்றது. "இந்திய அரசின் தலையீடு இன்மையாலேயே இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களைத் துணிவுடன் கைதுசெய்கின்றது" என்று ஸ்டாலின் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி யிருந்தார். இதற்கு கன்னியாகுமாரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது உரையாற்றிய பிரதமர் மோடி, "கச்சதீவை காங்கிரஸுடன் இணைந்து இலங்கைக் குத் தாரைவார்தது தி.மு.க.தான். தமிழக மக்களின் முதல் எதிரி தி.மு.க.தான்" என்றவாறாகத் தெரிவித் திருந்தார்.

இதற்கு வழங்கிய பதிலிலி லேயே, கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதில் தி.மு.க. அரசுக்கு உடன்பாடில்லை என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"தமிழக மக்களுக்கு உண்மை வரலாறு நன்றாகத் தெரியும். தி.மு.க. அரசின் கடும் எதிர்ப்பையும் மீறி கச்சதீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு மாநில அரசால் நாட்டின் ஒரு பகுதியை வேறு நாட்டுக்கு விட்டுக்கொடுக்க முடியும் என்று நம்பும் அளவுக்கு பிரதமர் அப்பாவியாக இருக்கிறாரா? கச்சதீவு விவகாரத்தில் தி.மு.க.வை குறிவைக் கும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி பொய் பேசுகிறார். தமிழக மீனவர்களை இந்தியர்களாக மோடி கருதவில்லை" என்று ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

**வேலையாள் தேவை**

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு கனரக சாரதி தேவை.

தொடர்பு:- 076 096 9728

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து கைதடி - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

2 பரப்பு - 4 1/2 லட்சம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

# மரண அறிவித்தல்



மலர்வு 19.05.1930 — உதிர்வு 17.03.2024

## லோகேஸ்வரி செல்லத்தம்பி

யாழ். நாரந்தனையை பிறப்பிடமாகவும் நாவலடி ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரி செல்லத்தம்பி நேற்றுமுன்தினம் (17-03-2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும், தனலட்சுமி (ஓய்வு நிலை தேசிய கல்விநிறுவக யாழ். பிராந்திய இணைப்பாளர்), ஜெயலட்சுமி (கனடா), காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் நவலட்சுமி (ஓய்வுநிலை அதிபர்), சுவர்ணலதா (அவுஸ்ரேலியா), யோகராணி (அவுஸ்ரேலியா), செல்விகா (விடுதிப்பொறுப்பு தாதிய சகோதரி, யாழ். போதனா வைத்தியசாலை), செல்வரூபன் (பணிப்பாளர், ஹம்டன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வில்வநாதன் (ஓய்வுநிலை அதிபர், தாதிய பயிற்சி கல்லூரி), ரகுமத் (கனடா), சந்திரகுமார் (ஓய்வு நிலை அதிபர்), அருட்செல்வன் (அவுஸ்ரேலியா), கலாநிதி பரமேஸ்வரன் (அவுஸ்ரேலியா), ஞானமதி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், எழினா (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி) - சுதாகர் (சிரேஷ்ட விரிவுரையாளர், கணணி விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), Dr.விபுலன்- Dr.மகிழினி, Dr.கவினா-கேதீஸ், காமிலா-சுனில், ரசிக்கா-மயூரன், நதிக்கா, சுஜன்-நீதினி, சுஜானி (இலங்கை வங்கி, யாழ். 2ம் கிளை) - நிருஷன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்வித்திணைக்களம்), கஜன், ஷகிலன்-வைகரி, சுபன், வானதி, Dr.கஜனன், Dr.பாலகி, கவினன், யாதவன், சுரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரோஷன், கோபினா, பபிஷன், நிதிஷன், ஆதித்யன், ஆதவி, மீரா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவஜா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசரட்ணம், கோபாலபிள்ளை, தியாகராசா மற்றும் புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கமலாதேவி, கனகசுந்தரம், தங்கம்மா நாகேசு மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-03-2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் முற்பகல் 11.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS/54408) N-1

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org